சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண். EA 1 of 2019 in EP 52 of 2015

2021ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின் /பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் P.W. 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் மலைச்சாமி | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>குறுக்கு விசாரணை</u> (R1)**

27-01-2021

தாவா சொத்து சம்மந்தமாக பெரியசாமி அழகர்சாமி என்பவருக்கு 2003 ஆம் ஆண்டிலே விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் ஆமாம். ஆனால் அதற்கு முன்பாகவே பெரியசாமி 1ம் எதிர்மனுதாரர் வங்கிக்கு அடமானம் எழுதி கொடுத்து இருந்தார் என்றால் தெரியாது. வங்கியில் அடமானம் நிலுவையில் இருக்கும்பொழுது எழுதப்பட்ட விடுதலை பத்திரம் வங்கியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வங்கியில் அடமானம் வைத்த பின்பு பெரியசாமி எழுதிக் கொடுக்கும் எந்த ஆவணமும் வங்கியே கட்டுப்படுத்தாது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. விடுதலை பத்திரம் வங்கி கடனை மோசடி செய்ய வேண்டி ஏற்பட்டது என்றால் தெரியாது. பெரியசாமி வாங்கிய கடனை

செலுத்தாததால் வங்கி ஏல நடவடிக்கை எடுத்தது என்றால் அமீனா வந்தபின்புதான் தெரியும். என் மனுவை வங்கியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.